மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி
அலகுப் பரீட்சை

பாடம் : அரசியல் விஞ்ஞானம் நேரம் : 1 மணி 30 நிமி

*** சகல வினாக்களுக்கும் விடை தருக.**

1) அரசியல் என்பது
   1. தேர்தல் செயன்முறையோடு வரையறுக்கபபட்ட பயன்படாகும்.
   2. அரசாங்கப் பரப்போடு மட்டும் வரையறுக்கப்பட்ட அதிகார போராட்டமாகும்.
   3. சமூக விஞ்ஞானங்களோடு அண்மைக் காலத்தில் இணைந்த எண்ணக் கருவாகும்.
   4. பொதுத்துறை நிர்வாகத்தோடு வரையறுக்கப்பட்ட செயன்முறையாகும்.
   5. அரசு மற்றும் சமூகங்களுக்கிடையில் நிலவும் அதிகாரத் தொடர்பாகும்.

2) அரசியல் என்பதன் சரியான சேர்மானம்
   A. அரசாங்கம் பற்றிய கலையும், விஞ்ஞானமுமாகும்.
   B. விழுமியங்களை அதிகார பூர்வமாக பகிர்ந்தளிக்கும் வழிமுறையாகும்.
   C. சமூக, பொருளாதார அரசியல் விவகாரங்களின் மீதான மோதும் நலன்களின் பெறுபேறாகும்.
   D. மதவிழுமியங்களின் தளத்தையுடைய சமூகமொன்றை உருவாக்குவது தொடர்பான அறம்சார் செயற்பாடாகும்.
   E. அரசியல் விஞ்ஞானத்தின் நடைமுறைப் பகுதி என கருதப்படுகிறது.

   1) ABCD 2) ABCE 3) ABDE 4) ACDE 5) BCDE

3) அரசியல் என்பதன் சரியான சேர்மானம்
   A. அரசியல்ரீதியாக ஒழுங்கமைந்த சமூகமாகும்.
   B. மக்களின் கூட்டு விருப்பினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு முகவராகும்.
   C. தேசங்களுக்கு மத்தியிலான அரசியலின் பிரதான செயற்பாடாகும்.
   D. இறைமை என்ற உயர் அதிகாரத்தின் உரிமையாளனாகும்.
   E. இறைமை, நிலப்பரப்பு , அரசாங்கம் மக்கள் தொகை போன்ற அடிப்படைக் கூறுகளைக் கொண்டு ஒழுங்கமைந்ததாகும்.

   1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

4) அரசியலுக்கும், அரசறிவியலுக்கும் இடையிலான தொடர்பை விளக்கும் மிகச் சரியான கூற்று,
   1. அரசியல் கட்சிகளினதும் அமைப்பினதும் செயற்பாடுகள்.
   2. அரசியல் செய்தலும் , அரசியலைக் கற்றலும்
   3. வாக்காளரின் நடத்தையை விளக்குவது.
   4. அரசாங்கத்தின் கொள்கைகளை விளக்குவது.
   5. தொழில்சார் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளை விளக்குவது.

5) நவீன சனநாயக அரசாங்க முறையினுள் பிரஜைகள் நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய பணிகளின் சேர்மானம்.
   1. A. அரசியலில் ஈடுபடல்.
   2. B. தேர்தலில் வாக்கினைப் பயன்படுத்தல்
   3. C. அரசியல் கட்சிகளின் உறுப்பினராக இருத்தல்.
   4. D. மத அனுஷ்டானங்களில் ஈடுபடல்
   5. E. தேர்தல் செயற்பாடுகளில் செயற்றிரனுடன் ஈடுபடல்

   1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

www.ikedu.lk

6) அரசியல் கருத்தியலுக்குள் உள்ளடங்காதது
   1. சம உடைமை வாதம்
   2. நடத்தை வாதம்
   3. லிபரல் வாதம்
   4. பெண்ணியல் வாதம்
   5. குடியரசு வாதம்

7) அரசியல் கருத்தியல்களின் பணியாவது
   1. மக்களின் நலன்களிலிருந்து விடுபட்டு செயல்படுவதற்கு அரசாங்கத்துக்கு வாய்ப்பளிப்பதாகும்.
   2. தேர்தல் செயன்முறையிலிருந்து சுயாதீனமாக நிற்பதற்கு பொது மக்களை தூண்டுவதாகும்.
   3. மக்களின் பொருளாதார நலன்களை வளர்ப்பதாகும்.
   4. குறிப்பிட்ட ஒரு அரசியல் கருத்தையும், இலக்கையும் சூழ மக்களை ஒன்று திரட்டுவதாகும்.
   5. பிரஜைகளுக்கு பகுத்தறிவை வழங்குவதாகும்.

8) பன்மைத்துவ அணுகு முறையில் கிரேக்கர் காலத்தில் தொடர்புபட்ட பாடத்துறையானது
   1. சமூகவியல் 2. மானுடவியல் 3. உளவியல் 4. புவியியல் 5. தத்துவவியல்

9) அரசியல் பொருளாதார அணுகு முறையின் சிந்தனையாளர்களுள் அடங்காதவர்
   1. அடம்ஸ்மித் 2. டேவிட் ரிகாடோ 3. ஜோன்ஸ் ஸ்டுவர்ட்மில்
   4. அரிஸ்டோட்டில் 5. தோமஸ் மெல்தஸ்

10) ஒப்பீட்டு அணுகு முறையின் பிரிவுகளில் அடங்காத கூற்று
   1. பழமை ஒப்பீட்டு அரசியல் அணுகு முறை
   2. இருபதாம் நூற்றாண்டின் ஒப்பீட்டு அரசியல் அணுகு முறை
   3. சமகால ஒப்பீட்டு அணுகு முறை
   4. எதிர்கால ஒப்பிட்டு அணுகு முறை

11) "அரசறிவியல் என்பது அரசியலைக் கற்கைத் துறையாகக் கற்பதாகும்." இக்கூற்றில் உள்ளடக்கப்படும் இரு கருத்தியல்களும் யாவை?
12) இந்திய மற்றும் சீன புராதன அரசியல் சிந்தனையாளர்கள் இருவரை முறையே குறிப்பிடுக.
13) அரசியலுக்கும், அரசறிவியலுக்கும் இடையிலான தொடர்பினை இரு முறைகளில் நோக்க முடியும். அவ்விரு முறைகளையும் குறிப்பிடுக.
14) அரசியலைக் கற்றல் என்பதில் இரு அர்த்தங்கள் உள்ளன. அவற்றைக் குறிப்பிடுக.
15) ஏதாவது இரு அரசியல் நிறுவனங்களைக் குறிப்பிடுக.
16) ஒப்பீட்டு அரசியலுக்கான அடிப்படை எனும் கட்டுரையை எழுதிய இரு அறிஞர்களையும் குறிப்பிடுக.
17) பின்வரும் நூல்களை எழுதிய இரு அரசியல் சிந்தனையாளர்களும் யாவர்?
   குடியரசு .....
   அரசியல் .....
18) பின்வரும் பண்புகள் பொருந்துகின்ற அரசியல் கருத்தியல்கள் இரண்டையும் முறையே குறிப்பிடுக.
   1. அரச வழிபாடு
   2. அரசு பற்றிய வர்க்க முறை விளக்கம்
19) அரசியல் விஞ்ஞான பரிசீலனைக்கான நவீன அணுகுமுறைகள் இரண்டைக் குறிப்பிடுக.
20) பெண்ணியல் வாதத்தின் அரசியல் மற்றும் சமூக விபரிப்புக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட எண்ணக் கருக்கள் இரண்டு தருக.

அரசியல் விஞ்ஞானம் II

*** பின்வரும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.**

1) அரசியலுக்கும், அரசறிவியலுக்கும் இடையிலான தொடர்பினை நுணுகி ஆராய்க. (20 புள்ளிகள்)

2) பின்வரும் இரு தலைப்புகளையும் விளக்கி எழுதுக.

   1. அரசியல் செய்தல்
   2. அரசியல் கற்றல் (10X2=20 புள்ளிகள்)

3) கீழ் குறிப்பிடப்படும் இரு அணுகு முறைகளையும் விளக்குக.

   1. நடத்தை வாதம்
   2. பெண்ணியல் வாதம் (10X2=20 புள்ளிகள்)

www.ikedu.lk